**OS NO;215/2010**
**Date:18.12.2019**
**Dw:2(Cross continuation)**
**Name:வசந்தபிரியா**
**Address:**

5முதல் 7பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

என்னிடம் காட்டப்படும் **பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் சர்வே எண்.179/4 ஐயிட்டம் 4ஆனது வை.ராகவல்நாயுடு மகன் கோவிந்தராஜ் நாயுடு பெயரில் உள்ளதா என்றால் உள்ளது, அது எந்த ஆவணம் என்று எனக்கு தெரியாது. கோவிந்தநாயுடு பெயரில் உள்ள சொத்தை தாவா ஐயிட்டம் 2ல் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அது எத்திராஜுலுநாயுடு சொந்தமான சொத்தாகும். வாதிகள் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணமானது வாரிசு சான்றிதழ் என்றால் தெரியாது, அந்த ஆவணத்தில் என் அப்பா மதனகோபால் இறந்ததால் அவர் வாரிசுகளை சேர்க்கவில்லை, இது வாதியால் கொடுக்கப்பட்டது, இது பற்றி எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதியின் இளைய சகோதரர் தான் என் தந்தை மதனகோபால் என்றால் சரிதான். என் தந்தையின் இரயில்வே பென்சன் பணத்தை என் தாயாரான 2ம் பிரதிவாதி தான் வாங்குகிறார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் சர்வே எண்.196/1ன் வில்லங்கச் சான்றிதழ் என்று கண்டுள்ளதா என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் வில்லங்க சான்றிதழ் என்று எழுதப்பட்டுள்ளது, அதில் உள்ள சர்வே எண்ணை பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் வை.ராகவல்நாயுடு அந்த சொத்தை ரூ.89.36காசுக்கு கோவிந்தராஜ் வாங்கியுள்ளார் என்றால் அந்த ஆவணத்தில் கண்டுள்ளது. அடுத்ததாக மூன்றாம் நபரிடமிருந்து அனுப்பம்பட்டு புஷ்பம்மாள் வாங்கியுள்ளார் என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. பி.வா.சா.ஆ.1 1903ல் வாங்கிய வை.ராகவல்நாயுடு வாங்கிய கடன் ஆவணம் இது தான் என்றால் அதைப் பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் 862 என்ற பைபாஸ் எண் உள்ளதா என்றால் ஆவணத்தில் உள்ளது. மேற்படி ஆவணமானது கிருஷ்ணயநாயுடு மகன் ராகவல்நாயுடுவின் கிரைய பத்திரம் என்றால் அதைப் பற்றி தெரியாது.**

பி.வா.சா.ஆ.15 ஆவணமானது வாதிகள் குடும்பத்தார் பாகப்பிரிவினையில் அதே சர்வே எண்.106/1ஐ பொய்யான தகவலை சொல்லி ஐந்து பாகங்களாக பிரித்துள்ளார்களா என்றால் அதைப் பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் 184/3,243/6 மேற்படி சொத்துக்களையும் சேர்த்து பிரித்துக் கொண்டார்களா என்றால் அதைப் பற்றி தெரியாது. 243/6.184/3, 196/1 மற்றும் 106/1 மற்றும் சில பூர்வீகச் சொத்துக்களையும், முதல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து 6ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து, வாதிகள் விற்ற பூர்வீகச் சொத்துக்களை சேர்க்காமல் போடப்பட்ட ஒரு பொய்யான வழக்கு என்று சொன்னால் அதைப் பற்றி தெரியாது, பொய்யான வழக்கு அல்ல. சர்வே எண்.243/6 உள்ள சொத்தை வாதியின் குடும்பத்தார் கோவிந்தராஜ் என்பவர் 2008ல் கோவிந்தநாயுடு என்ற கோவிந்தராஜ் என்பவர் அவருக்கு அவர் மாமனார் வாய்மொழியாக கொடுத்த சொத்து என்று விற்றதை அறிந்த முதல் பிரதிவாதி அவரை கேட்க போகவே, எங்கு வாதிகளும் இரண்டு, நான்கு பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து அதை மறைக்கவே போடப்பட்ட பொய்யான வழக்கு என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் 1ம் பிரதிவாதி அவர் இறப்பிற்கு முன் ஏற்பட்ட மனஉளைச்சலுக்கும், அவர் குடும்பத்தாருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், மற்றும் நீதிமன்றம் நாடிய செலவுகளுக்கும் நாங்களும், வாதிகளும் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை.